(5) தகவல் கோரல்

(அ) அமைச்சரவை விரிவாக்கப்படும் என்பதான செய்தி குறித்து.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, ஒரு கிளாரிபிகேஷன். இன்றைக்கு இந்தத் தொடர் கூட்டத்தினுடைய இறுதி நாளாக இருக்கிறது. மந்திரி சபையை விஸ்தரிக்கப் போவதாக நாங்கள் எல்லாம் பத்திரிக்கையில் பார்க்கிறோம். அந்த அறிவிப்பை இந்த மன்றத்திலேயே செய்தால், நாங்கள் எல்லாம் வருகின்ற மந்திரிகளை வாழ்த்துவதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படும். எனவே, அப்படி மந்திரி சபையில் இடம் பெறப் போகின்ற பெரியவர் யார் என்று முதலமைச்சரவர்கள் அருள்கூர்ந்து தெரிவிப்பார் என்று கருதுகிறேன். முதலமைச்சர் அவர்கள் முன்பே, இந்த மந்திரிசபையை விஸ்தரிப்பதற்கு இடம் இருக்கிறது என்று இந்த மன்றத்தில் ஒரு கருத்தினைத் தெரிவித்தார்கள். அப்படியானால், அமைச்சரவை விஸ்தரிக்கப்பட இருந்தால், அந்த அறிவிப்பை இங்கே இந்த மன்றத்திலே அறிவித்தால் நல்லது. பிரஸ்-க்குக் கொடுப்பதற்கு முன்னால் நாங்கள் அதைத் தெரிந்துகொள்வதற்கு உரிமை உள்ளவர்களாக இருக்கிறோம் என்று நம்புகிறோம். எனவே, அந்த அறிவிப்பை இங்கே செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எழுப்பிய இந்தப் பிரச்சினைக்கு நான் சொல்கின்ற பதில், அவர் பத்திரிக்கையில் பார்த்ததாகச் சொன்னார்கள். மந்திரிசபை விரிவாக்கப்பட இருப்பதாக பத்திரிக்கையில் பார்த்ததாகச் சொன்னார்கள். விரிவாக்கப்பட்டால், பத்திரிக்கையிலே பார்த்துக் கொள்ளலாம். இப்பொழுது சொன்னால் வாழ்த்தலாம் என்று சொன்னார்கள். பிறகு சொன்ன பிறகு வாழ்த்துத் தந்தி அனுப்பலாம்.

(ஆ) எஸ்.எஸ்.எல்.சி. விடைத் தாள்கள் காணாமற் போய்விட்டன என்பதான செய்தி குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இன்று இந்தத் தொடர்க் கூட்டத்தின் கடைசி நாள். நாங்கள் ஏற்கனவே, விதிகள் 41, 42 இன் கீழ் தீர்மானங்கள் கொடுத்திருந்தோம்.